RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s1971

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் இயற்கை கோட்பாட்டில் வழிபாடு

**த. கபிலன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தனலட்சுமி சீனிவாசன் கல்வியியல் கல்லூரி, பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Worshiping Nature in Sangam Literature

**T. Kabilan** [a, *]

[a] Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Education, Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: kabilanthangamahes@gmail.com

Received: 08-08-2022
Revised: 20-10-2022
Accepted: 06-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Rituals in human life are a socio-cultural phenomenon that occurs from birth to death. Ritualistic concepts of worship play an important role in all these events. 'Worship' is an activity deeply rooted in human faith. Through Sangam literature we can know that worshiping nature is an important activity in all kinds of events that happens in human life. Rituals may have originated before the concept of God or Lord. These rituals are performed based on faith, belief and customs.

**Keywords:** Sangam Literature, Worshiping, Nature

## முன்னுரை

விலங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி கண்ட மனிதன் இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அஞ்சினான். புயலுக்கும், இடிக்கும், மின்னலுக்கும் பயந்த மனிதனின் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டது. அதாவது தனது சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் வினைகள்தான் இவை என்பதாகப் புரிந்து கொண்டான். இவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவனுக்குத் தெரிந்த முறைகளைக் கடைப்பிடித்தான். இயற்கையின் முழு ஆற்றலையும் அடைவதற்கு முயற்சித்தான். “இயற்கைச் சூழலுடன் ஒன்றி வாழ்ந்த தொன்மை மக்கள், பல சமயங்களில் அவர்களின் ஆற்றல்களால் இயற்கையின் சீற்றங்களிலிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள இயலவில்லை. அத்தகைய சூழலில் அவர்களைச் சார்ந்த இயற்கையையும் மீறிய ஆற்றல் இருக்கின்றது என நம்பி அவ்வாற்றலின் துணையுடன் இயற்கையின் முழுப் பலனைப் பெற முயற்சித்தனர்.

## இயற்கைக் கோட்பாடு

மனிதன் தம் வாழ்வில் விளங்கிக் கொள்ள முடியாத இயற்கையின் ஆற்றலை விளங்கிக் கொண்டு அவற்றை மேலாண்மை செய்யும் முறையியலை உருவாக்கினான். “அவ்வாற்றலைக் கையகப்படுத்திக் கட்டுப்படுத்தும் அல்லது மேலாதிக்கம் செலுத்தும் வழிமுறையை மேற்கொண்டனர். அவ்வாறு கையகப்படுத்திய ஆற்றலைச் சில சூத்திரங்களாக அல்லது வாய்ப்பாடுகளாகச் சுருக்கி உச்சரிப்பதன் மூலம் அவ்வாற்றலைச் செயல்படுத்தும் நிலையை மேற்கொண்டனர். அவ்வாறு அமைத்துக் கொண்ட போது அவர்கள் தொடர்பு கொள்ள எண்ணிய பொருளின் ஆற்றல் அவர்களுக்கு அடங்கிப் போவது தவிர வேறு வழியில்லை என்னும் நிலையை ஏற்படுத்தினர். எனவே மலை கடல்,

மரம், விலங்குகள் போன்ற தங்கள் அன்றாட வாழ்வியல் முக்கியத்துவம் பெற்ற பொருட்களையும் தாங்கள் அஞ்சிய பொருட்களையும் வழிபாடு செய்யத்தொடங்கினர்.

## மலையும் வழிபாடும்

மலைகளில் தெய்வம் உறைவதையும் வழிபட்டதையும் அதை மக்கள் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. மலை மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக இருப்பதுடன் தேவையான பொருட்களைக் கொடுக்கும் களமாகவும் இருக்கிறது. "மலையானது புதிர்மை நிறைந்ததாகவும், கடவுளர் குடி கொண்டிருக்கும் இடமாகவும், அரசக் குறியீடாகவும், காவல் அரணாகவும் காணப்படுகிறது. காவல் மரத்திற்கு ஊடாக மலை அக்காலத்தில் கருதக் காரணம் அதன் இயற்கையமைப்பும் வளமும் ஆகும்". என்ற கூற்று மலை மக்களால் மையப்படுத்தப்பட்டமைக்கான காரணத்தைக் கூறுகிறது.

மலையின் மீது உள்ள முருகவேலை மக்கள் வழிபட்டதையும், அக்கடவுளுக்குப் பூசை செய்ததையும் அகநானூற்றுப் பாடல் பின்வருமாறு காட்டுகிறது.

"தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்

முனைதிரை கொடுக்குந் துப்பின் தன்மலைத்

தெறலரும் மரபின் கடவுட் பேணிக்"

என்ற இப்பாடலில் பிறரால் வெல்ல முடியாத அளவிற்குப் பாதுகாப்பு அரணாக இருக்கும் மலையில் இருக்கின்ற கடவுள் என்பதால் முருகக் கடவுளோடு சேர்ந்து மலையும் மக்களைக் காக்கிறது என்ற கருத்து புலப்படுத்தப்பட்டுள்ளது (Subramaniyan, 2001). முருகக் கடவுள், தொன்மை மக்களின் வழிபடு தெய்வமாகும். அதாவது முருகன், ஆரியர் வருகைக்கு முன் தமிழ் நிலத்தில் இருந்த முதன்மைத் தெய்வங்களில் ஒன்றாகும். வேட்டைக் கடவுள் என்பதாலேயே வேலுடன் முருகனை அடையாளப்படுத்துவதுண்டு. தலைவனின் களவொழுக்க வாழ்வைப் பற்றிக் கூறவந்த ஆசிரியர் தலைவன் கடந்து வந்த பாதை தெய்வம் உறைகின்ற மலை என எடுத்துக் காட்டுகிறார்.

"இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்

புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்குல்

அருவி தந்த அணங்குடை நெடுங்கோட்டு"

இதில் அணங்குடை நெடுங்கோட்டு என்னும் அடி மலையில் தெய்வம் உறைகிறது என்ற நம்பிக்கை அக்கால மக்களிடத்தில் இருந்தமையைக் காட்டுகிறது (Subramaniyan, 2001). தலைவியின் கற்பின் பெருமையைக் கூற நினைத்த தலைவனின் நெஞ்சமானது அவளைச் சூரர மகளிர் என்றே எண்ணுகிறது,

"ஆஅய் நன்நாட்டு அணங்குடைச் சிலம்பில்

கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்

நேர்மலர் நிறைசுனை உறையுஞ்

சூர்மகள் மாதோ என்னும்என் நெஞ்சே"

என்று தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லுகிறான் (Subramaniyan, 2001). ஆய் என்பானது நாட்டின் கண் உள்ள மலையில் தெய்வம் உறைகின்றது என்பதால் மலை தெய்வத்தால் காக்கப்படுகிறது என்பதாகிறது. மேலும், மலைக்குப் பலியிட்டு வழிபட்ட குறிப்பினை நற்றிணை எடுத்துக்காட்டுகிறது. மலையில் உறையும் கடவுள் பலியை ஏற்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது என்பதையும் அறிய முடிகிறது.

"அமர்க்கண் இமான் அருநிறம் முள்காது

பணைத்த பகழிப் போக்குநினைந்து கானவன்

அணங்கொடு நின்றது மலைவான் கொள்கெனக்

கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டெழுந்து

கிளையொடு மகிழும் குன்ற நாடன்"

என்ற பாடல் வேட்டையின் போது அம்பு குறி தவறியதற்குக் காரணம் மலைவாழ் கடவுளே என்ற கருத்தினனாய், மழை பொழியாததால்தான் தெய்வம் கோபம் கொண்டுள்ளது என்று நினைக்கும் வேடனின் நிலையைச் சுட்டுகிறது (Balasubramanian, 2006). அவன் தெய்வத்தின் கோபத்தைத் தணிக்கச் சுற்றத்தாருடன் வந்து கடவுளை வழிபடும்போது மலைக்குப் பலியிட்டு வழிபடுகிறான். பலியை மலை ஏற்றுக் கொள்ளும் எனும் பொருள்படும் படி பாடல் அமைந்துள்ளதால் தொடக்க கால மனித வாழ்க்கையில் மலை வழிபாட்டுக்குரியதாக இருந்து காலப்போக்கில் மலையில் தெய்வம் உறைகிறது அதை வழிபட வேண்டும் என்ற நிலை உருவாகியதை இப்பாடல் காட்டுகின்றது. இவை போன்றே "அணங்குடைச் சாரல்" (பெரும்) "சூர் மகள்" (நற் 34) "சூர்மலை" (ஐங்.24(9) ஆகிய சொற்றொடர்கள் மலையில் உறைகின்ற தெய்வத்தை வணங்கியதோடு சங்ககால மக்கள் மலையையும் வணங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றன.

## கடலை வணங்குதல்

கடலை வணங்கும் மரபு பழந்தமிழ் மக்களிடம் இருந்தது என்பதைச் சங்கப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

"அணங்குடை முந்நீர் பரந்த செறுமின்"

என்ற பாடல் வரி கடலில் தெய்வம் உறையும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது (Subramaniyan, 2001). "மலை. காடுகளில் மட்டுமல்லாது, கடல் போன்ற நீர் நிலைகளிலும் உறைந்தனவாகிய அணங்கு முதலிய சக்திகளையும் அவற்றின் இடர் உண்டாக்கும் தன்மையைக் கருதி வணங்கிச் சடங்குகள் இயற்றினர். கடலை வழிபாட்டிற்குரிய தெய்வமாகக் கருதியுள்ளனர் என்பதனை,

"பெருங்கடல் தெய்வநீர் நோக்கித் தெளித்தென்" (Balasubramanian, 2004)

என்று தலைவன் தலைவியிடம் கடல் நீர் தெய்வ நீர் என்று கூறி அதன் மீது சூளுரைக்கிறான்.

"குளும் பொய்யோ கடலறி கரியே"

என்ற அகநானூற்றடிகள் தலைவன் கடல் தெய்வத்தை சாட்சியாகக் கொண்டு சூளுரைத்த செய்தியை எடுத்துரைக்கிறது (Subramaniyan, 2001).

கடலைக் குலக்குறியாகக் கொண்டு வாழ்ந்த மக்கள் காலப்போக்கில் கடலில் உறையும் தெய்வமும் தங்களை வருத்தும் என்று கருதி அதற்குச் சடங்குகள் செய்து வழிபட வேண்டும் என்று கருதினர். "பேரிரைச்சலும் வீச்சுமுடைய அலைகள், புயல் காற்று, நீரோட்டங்கள் ஆளையே வீழ்த்தக்கூடிய பனவன், சுறா போன்ற கொடிய மீன்கள் ஆகியவற்றின் வடிவில் காணப்படும் இடர்ப்பாடுகளைக் கொண்ட கடற்பரப்பினை இடமாகக் கொண்டு வாழ்ந்ததென்று கருதப்பட்ட அணங்கை மேற்கூறிய அபாயங்களின் ஒருங்கு திரண்ட வடிவமாகத் தம்மை அறியாமலேயே கூடப் பண்டைக்கால மீனவர்கள் கருதியிருக்கலாம். எனவே கட்புலனுக்கு அகப்படாத எவ்வித வடிவ வரையறைக்கும் உட்படாத ஒரு வலிய ஆற்றலான அவ்வணங்கு பொதுவாக இன்னல் இழைக்கக் கூடியதாக எண்ணப்பட்டது. எனவே அது தமக்கு இன்னல் விளைவிக்காமல் இருப்பதற்கும் வலைவளம் பெருருவதற்கும் அதனை அமைதிப்படுத்தி வழிபாடு இயற்றும் சடங்கு மரபுகளைக் கடைப்பிடிக்கும் வழக்கத்தைக் கொண்டனர் என்கிறார் (Subramaniyan, 2001). கூற்று கடல் வழிபடு பொருளாகியமைக்கானச் காரணத்தை வெளிக்காட்டுகிறது.

## மரவழிபாடு

தொல் பழங்குடிகளிடம் மரத்தை வழிபடும் வழிபாட்டு முறை இருந்தது. “பழங்கால மக்கள் தங்கள் இனம் அல்லது குழு ஒரு குறிப்பிட்ட மரத்திலிருந்து தான் தோன்றியது என நம்பினர். எகிப்தின் புகழ்பெற்ற பேரரசனான ‘ஓசிரிசு’ அந்நாடு முழுவதும் ‘சாவுக்கடவுளாக’ வணங்கப்பட்டான். பயிர்கள் தழைத்துச் செழிக்கும்போது இவன் பிறப்பதாகவும் அறுவடைக் காலத்தில் இறப்பதாகவும் கூறப்படுகிறது. பெனீசியாவின் அழகுக் கடவுள் அடோனிசு இவனது தாய் ஒரு மரமாக உருவகிக்கப்படுகிறாள். இத்தகைய வழிபாடுகள் மானுடவியல் அறிஞர்கள் கூற்றான ‘தம் குலம் தோன்றியது குறிப்பிட்ட விலங்கு, மரத்திலிருந்து தான் என்று நம்புவதும் இதனைப் படையல் முதலியவற்றால் வழிபடுவதும் இதன் அடிப்படையாகும்’ என்பதற்குச் சான்றாக அமைகின்றது. இக்கோட்பாடு குலக்குறி அடிப்படை வழிபாடு என மானிடவியலாளரால் குறிக்கப்படும்”. இறந்தவர்களின் ஆவி மரத்தில் தங்கும் என்ற நம்பிக்கையின் காரணமாகவும், மரத்தை வழிபடத் தொடங்கினர். பழங்கால மக்களின் தோற்றக் கொள்கை அவர்களை விலங்குகளோடும். தாவரத்தோடும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது. அதனாலே அவர்கள் அவற்றைப் போற்றிப் பாதுகாத்துள்ளனர்.

மரத்தை வழிபடுவதாக இருந்த வழிபாட்டு முறை மாறிக் கடவுள் உறைவதாகக் கருதி மரத்தை வழிபடுதல் என்ற நிலைக்குச் சென்றதையும் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

“எம்மூர் வாயில் ஒண்டுறைத் தடைஇய

கடவுள் முதுமரத்து உடனுறை பழகிய”

என்ற பாடல் நீர்த்துறையில் இருக்கின்ற பழமையான மரத்திலே தெய்வம் உறைகின்ற செய்தியைக் குறிப்பிடுகின்றது (Balasubramanian, 2006).

“கடவுள் மரத்த மூன்மீடை குடம்பைச்”

என்ற பாடலடி மரத்தில் கடவுள் உறைந்திருக்கும் என்ற கருத்தைச் சுட்டுகின்றது (Subramaniyan, 2001). மன்றம் இருக்கும் இடத்தில் உள்ள பெண்ணை மரத்தில் தெய்வம் உறையும் செய்தியை,

“தொன்றுஉறை கடவுள் சேர்ந்த பராரை”

என்ற நற்றிணை பாடலடி காட்டுகின்றது (Balasubramanian, 2006). அச்சம் தரக்கூடிய சூர் எனும் தெய்வம் ஓமை மரத்தில் மறைந்திருக்கும் செய்தியை,

“சூர்முத லிருந்த ஓமையம் புறவின்” (Subramaniyan, 2001)

என்று அகநானூறும், கடம்ப மரத்தில் தெய்வம் உறைகின்ற செய்தியை

“மன்றா மராஅத்த பேஎமுதிர் கடவுள்

கொடியோர்த் தொறூஉம் என்ப யாவதும்”

என்று குறுந்தொகை சுட்டுகின்றது (Nagarajan, 2004). கடம்ப மரத்தில் தெய்வம் உறைகின்றது என்றும், அத்தெய்வம் கொடுமை செய்வோரைக் கொன்றுவிடும் என்றும் கருதுகின்ற பழக்கம் மக்களிடம் இருந்ததைக் இப்பாடல் வழி அறியமுடிகிறது. மேலும் கடம்பமரம் முருகனுக்கு உரியது என்பதால் முருகன் உறைவதாகக் கூட நினைத்துப் பார்ப்பதற்கு வாய்ப்புண்டு. இன்றும் மன்றம் மனிதத்தன்மை உடைய இடமாகவும், நீதி வழங்கும் இடமாகவும் இருப்பதால் அதைப் போற்றிப் பாதுகாக்கின்ற நிலையைப் பார்க்க முடிகிறது.

## எருமைக் கொம்பு வழிபாடு

முல்லை நிலத்தில் வாழ்கின்ற ஆயர்கள் வருமைக் கொம்பை நட்டு அதைத் தெய்வமாகக் கருதி வழிபட்டனர் என்பதை முல்லைக் கலிப்பாடல் காட்டுகிறது.

“தருமணல் தாழப்பெய் தில்பூவ லூட்டி

எருமைப் பெடையொ டெமரீங் கயரும்

பெருமண மெல்லாந் தனித்தே யொழிய

வரிமணன் முன்றுறைச் சிற்றில் புனைந்த"

என்ற பாடல் அடிகள் பெண் எருமையின் கொம்பை நட்டு வழிபட்டதைக் குறிப்பிடுகின்றன (Balasubramanian, 2004). இப்பாடலில் "கொண்டு வந்து குவித்த மணலைத் தங்கும்படியாகப் பரப்பி இல்லத்தைச் செம்மண் பூசித் தெய்வமாகப் பெண் எருமையின் கொம்பினை வைத்து எமர் பெருமணம் எடுக்கின்றனர்"" இது அக்கால மக்களின் சடங்கு நிகழ்த்து முறையாக உள்ளது. முல்லை நில மக்களின் வாழ்விற்குப் பெரும் துணைபுரிகின்ற எருமையின் கொம்பு வழிபாட்டிற்குரிய பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது. அதுவும் பெண் எருமை என்பதால் வளமையின் பொருட்டுச் சிறப்பிற்கு உரியதாகக் கருதப்பட்டிருக்கலாம் என்பதை இப்பாடலின் மூலம் அறிய முடிகிறது. "பெண் எருமையின் கொம்பை வீட்டினுள் நட்டு வைத்து அதனைத் தெய்வமாகப் பாவித்து வழிபட்டமையையும் அறியப் முடிகின்றது. இது ஆயர்தம் குல வழக்கம் எனக் கருதலாம். இவ்வாறே நெய்தல் நிலத்தவரிடையே சுறவுக்கோடு நட்டுத் தெய்வம் பரவும் வழக்கம் இருந்துள்ளதனைச் சங்க நூல்களால் அறியலாம்.

முல்லைநில மக்களின் 'எருமைக் கொம்பு வழிபாடு குலக்குறியின் தோற்ற நிலையிலே இருப்பதை உணரலாம். அதாவது சுறாமுள் வழிபாடு என்பது அம்முள்ளில் தெய்வத்தை இருத்தி வழிபடுதல் என்ற நிலையாகும். ஆனால் இங்கு கொம்பையே தெய்வமாகக் கொண்டு வழிபட்டுள்ளனர். எனவே எருமைக் கொம்பு வழிபாடு முல்லைநில மக்களின் பழமையான வழிபாட்டு முறை என்பது புலப்படுகிறது.

## சுறாமுள் வழிபாடு

சுறாமுள் வழிபாடு பரதவ மக்களின் வாழ்வியலை இனம் காட்டுகிறது. வழிபாட்டின் மூலம் பொருட்களிலும், பண்பாடு குறித்தான இருப்பு அவர்களின் புழங்கு வாழ்க்கை ஆதாரங்களிலும் இருந்து பெறப்படுகிறது. தங்களுக்கு அறிமுகமில்லாத எந்தப் பொருளும் குலக்குறி அடையாளத்திலோ, வழிபாட்டிலோ இடம் பெறுவதில்லை என்ற நோக்கத்தின் அடிப்படையிலே தங்களுக்கு உணவாக இருக்கக் கூடிய சுறாவின் கொம்பை நட்டு அதில் தெய்வத்தை உறைய வைத்து வழிபாடு நிகழ்த்தியதைச் சங்க இலக்கியப் பட்டினப்பாலை எடுத்துக்காட்டுகிறது, "சினைச்சுறாவின் கோட்டில் குடி கொள்ளும் பண்டைக்காலத்தில் மீனவர்களுடைய, நம்பிக்கையாக இருந்தது. நீர் நிலைகளிலும், மற்றும் காடுகளிலும் உறைகின்றது கருதப்பட்ட, இனம் காண முடியாத சக்தியான வலிய ஆற்றல் தீமை விளைவிக்கக் கூடியது. இவ்வலிய கொண்ட அணங்கினை, இன்னொரு வலிய ஆற்றலுடைய விலங்கான வாட் சுறாவுடன் இணைத்து நோக்கியது அறிவுக்கு அப்பாற்பட்ட பண்டையக் கட்புலனுக்கு அகப்படாத, மீனவரின் சிந்தனையாகும். அதாவது உறையும் வன்மையான புறச் சக்தியான அணங்கு, கட்புலனுக்கு செருக்கித் வலிமையுடைய விலங்கான கடலில் மீனின் முள்ளில் (கோடு) தான் குடியேறும் என்று கருதியது அக்காலத்து தர்க்க அறிவாகும். இந்தச் சிந்தனையின் செயல் சினைச்சுறாவின் நட்டு மனைச் சேர்த்திய வல்லணங்கு என்று மீனவரின் தர்க்க அறிவை எடுத்துக்காட்டுகின்றனர். சுறாவினால் கடலில் பல இடர்பாடுகளையும் சந்தித்திருக்கலாம். அற்றால் வாய்ந்த ஒரு கருவி. மனித சக்தியைவிட மேம்பட்டது என்ற இச்சுறாமுள் வழிபாட்டிற்கு காரணமாகியிருக்கலாம்.

"சினைச்சுறாவின் கோடுநட்டு

மனைச்சேர்த்திய வல்லணங்கினால்

மலர்மலைந்தும் பிணர்ப்பெண்ணைப்

பிழிமாந்தியும் இரும்பரதவர்"

இப்பாடலில் சுறா என்று சொல்லாமல் சினைச்சுறா என்றதற்கு வளமை "சினைச் சுறாவைத் தேர்ந்தெடுத்து அதாவது கருவற்ற பெண் தேர்ந்தெடுத்து அதன் மருப்பைத் துண்டித்து நட்டு

வழிபட்டமை வழக்கம் வேறொரு சிந்தனையையும் தாங்கியிருக்கிறது. சினை கரு என்பது செழிப்பின் அடையாளமாகிறது (Subramaniyan, 2001). இது வளமை நம்பிக்கையின் அடிப்படையிலெழுந்த சடங்காகவும் தோன்றுகிறது" நெய்தல் நில மக்கள் தங்களது குலவாழ்விற்குக் காரணமான கொம்பை நட்டு வழிபாடு நடத்தியிருக்கிறார்கள். தெய்வத்திற்கு நடத்தும் சடங்கின்போது மேற்கொள்ளப்படும் பண்பாட்டு மரபுகளையும், இவ்வழிபாட்டில் காண முடிகின்றது. மாலை அணிந்து பனையின் கள்ளினை அருந்தி விளையாடுவர் என்பது வழிபாட்டுச் சடங்கின் ஒரு பகுதி என கருத இடமுள்ளது.

பரதவர்களின் வாழ்வாதாரம் முழுவதும் கடலையே நம்பியுள்ளது. குறிப்பாக மீன் அவர்களின் முக்கிய உணவுப் பொருளாக இருப்பதால் மீன் பெருக்கத்திற்காக இச்சடங்கை நிகழ்த்தி வழிபாடு செய்திருக்கலாம். "குலக்குறியாக (Totem) அமையும் ஒரு விலங்கினை. அதோடு தொடர்புடைய சமூகக் குழுவினர் கொல்லவோ, தின்னவோ கூடாது என்பது, அவர்களால் கடைப்பிடிக்கப்படும் விலக்கல் கொள்கையாகும் (Taboo). இவ்விலக்கல் கொள்கையை மீறினால், அவர்களுக்குத் தீமை விளையும் என்பது நம்பிக்கை. சிற்சில கட்டங்களில் இக்கொள்கையை மீறுவதற்கும் அனுமதி உண்டு. அவ்வாறு மீறும் வகையில் குலக்குறி விலங்கினைக் கொன்று தின்றவர்கள் அவ்விலங்கின் ஆவியிடம் அதனைக் கொன்றமைக்காக மன்னிப்புக் கோரும் சடங்கினை இயற்றுதல் வேண்டும் என்பது விதி. இல்லையாயின் விலங்கின் ஆவி அவர்களைப் பழிவாங்கிவிடும்.

குலக்குறியியல் தொடர்பான பண்புகளில் ஒன்றான இது சுறாமுள் வழிபாட்டுச் சடங்கிலும் உள்ளது" என்ற கூற்று இதனை உறுதி செய்கிறது. பட்டினப்பாலை. கடற்கரை நகரத்தைப் பதிவு செய்யும்போது தொல்பழங்குடிகளின் பண்பாட்டு வளமான சுறா கொம்பின் நோக்கத்தக்கது. வழிபாட்டு முறைகளையும் பதிவு செய்யகின்றமை நோக்கத்தக்கது.

## முடிவுரை

உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் இடமாக மலை இருந்துள்ளதால் குலக்குறியாக அடையாளப்படுத்தப்பட்டு. பிறகு அதில் தெய்வம் உறைவதாகக் கருதி வழிபாடு நிகழ்த்தி உள்ளனர் என்பதைச் சங்கப் பாடல்களின் வழி அறிய முடிகிறது. கடலை வணங்கும் தன்மை கடல் வேட்டை மேற்கொள்ளும் நெய்தல் நில மக்களிடம் இருந்துள்ளது. வாழ்விற்கு முக்கிய ஆதாரமான கடலில் தெய்வம் உறையும் என்று எண்ணி வணங்கி உள்ளனர். மரவழிப்பாட்டின் எச்சமாக மரத்தில் அணங்கு (தெய்வம்) உறைவதாக எண்ணி வழிபட்ட நிலையினைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. எருமைக் கொம்பு வழிபாடு முல்லை நில மக்களின் வழிபாட்டு முறைகளில் ஒன்றாக இருந்துள்ளது. அதனாலே எருமைக் கொம்பில் அணங்கை ஏற்றி வழிபட்ட நிலையினைச் சங்கப் பாடல் பதிவு செய்துள்ளது. மீன் வேட்டை மேற்கொள்ளும் பரதவ மக்கள் சுறாமுள் வழிபாட்டைக் கொண்டிருந்தனர். கடலில் உள்ள அணங்கு தங்களை வருத்தக் கூடாது என்று எண்ணி அதைச் சுறா முள்ளில் ஏற்றி வைத்து, வழிபட்டதைச் சங்கப் பாடல் கொண்டு உணர முடிகிறது.

## References

Balasubramanian, K.V. (2004) Kalithogai, Paavai Publications, Thanjavur, India.

Balasubramanian, K.V. (2006) Nattrinai, Paavai Publications, Thanjavur, India.

Nagarajan, V. (2004) Kurunthogai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Subramaniyan, S.V. (2001) Agananooru, Manivasagam Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License